Nallur Branch Library


# அறவழி

NONVIOLENCE

வெளியீடு
அறவழிப்
போராட்டக் குழு
அஞ்சல் பெட்டி எண் 2
சாவகச்சேரி
(N. V. D. A. G.)

அறம் 2 மாத இதழ் ✳ 1987 ஆவணி பக்கம் 10 ✳ விலை 2-00 வழி 15


## இனப்பிரச்சனைத் தீர்வுக்கு சமாதான உடன்படிக்கை!

கடந்த முப்பது ஆண்டு காலமாக இலங்கையில் நிலவிவருகின்ற இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணும் பொருட்டு, இலங்கை – இந்திய நாடுகளுக்கிடையிலான சமாதான உடன்படிக்கை ஒன்று ஜூலை மாதம் 29ம் திகதி கொழும்பில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இவ்வரலாற்று முக்கியத்துவம் பெற்றதாகக் கருதப்படுகின்ற சமாதான உடன்படிக்கையில் இலங்கை ஜனாதிபதி திரு. ஜே, ஆர். ஜெயவர்த்தனவும், இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியும் கைச்சாத்திட்டனர்.

இவ் உடன்படிக்கையில் காட்டப்பட்டுள்ள தீர்மானங்களைக் காலதாமதமின்றி நடைமுறைப்படுத்த இந்திய அரசு சகல வழிகளிலும் செயற்படும் எனவும் தெரியவந்துள்ளது.

கடந்த முப்பது ஆண்டுகளாக நிலவி வருகின்ற இனப்பிரச்சனையின் காரணமாக சுமார் 14,000 உயிர்கள் கொல்லப்பட்டதுடன், தமிழ் மக்களின் உடமைகளும் நாசகாரம் செய்யப்பட்டமையும் யாவரும் அறிந்ததே!

இலங்கையின் இனப்பிரச்சனைத் தீர்வுக்கு இச்சமாதான உடன்படிக்கையானது முதல் படியாகவே கருதப்படுகின்றது என அறியப்படுகின்றது.

## மீண்டும் கருள் ஜூலை!

இலங்கையின் இனப்பிரச்சனைத் தீர்வுக்கு இலங்கை—இந்திய அரசுகளால் முன்வைக்கப்பட்டு, கைச்சாத்திடப்பட்ட சமாதான உடன்படிக்கைக்கு எதிர்ப்புத்தெரிவிக்கும்வகையில், நாட்டின் தென்பகுதியில் மற்றுமொரு ஜூலைக் கலவரம் கடந்த 28ம் திகதி ஏற்பட்டது.

இக்கலவரத்தின்போது சுமார் 50 பேர் வரையில் பலியாகி உள்ளதுடன், நூற்றுக் கணக்கானவர்கள் காயத்துக்குள்ளாகினர். கூடவே, கலகக்காரர்களால், வாகனங்கள், கடைகள், அரசகட்டடங்கள் எரிக்கப்பட்டதுடன் பல்வேறு இடங்களில் கொள்ளைகளும் இடம் பெற்றுள்ளன எனத் தெரியவந்துள்ளது.

தென் பகுதியில் வாழ்கின்ற பல தமிழ் மக்களின் கடைகள், வீடுகள் மற்றும் சொத்துக்களும் தீக்கிரையாக்கப்பட்டதுடன் கொள்ளைகளும் அடிக்கப்பட்டன.

இக்கலவரம் காரணமாக நாடெங்கிலும் ஊரடங்குச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது.

மீண்டும் தோற்றுவிக்கப்பட்ட கருள் ஜூலைக் கலவரத்தின் காரணமாக, ஆயிரக் கணக்கான தமிழர்கள், வடபகுதி நோக்கி வந்துள்ளனர்.

தானத்தில் சிறந்தது சமாதானம்

# மக்களுக்காகப் பணி செய்வீர்!

பணிசெய்வதே ஒரு சுகம், அதற்காகவே பணியாற்றுங்கள். கிராம முன்னேற்றத்திலும் தங்கள் உடல் நலத்தைப் பேணுவதிலும் கிராமங்கள் அக்கறை கொள்ளவேண்டும். இப்பணியை சகல சேவையாளரும் விரும்பினுல் இப்பணி செய்வதில் உங்களுக்கும் ஆனந்தம். உங்களைப் பின்பற்றுவோருக்கும் ஆனந்தம்: இத்தகைய பணிகளை பின்பற்ருவிட்டால் யார்தான் உங்களைப் பின்பற்றுவார்கள்.

சமூகப்பணி திட்டங்களை மகிழ்ச்சிக்குரியனவாக்க முயலுங்கள்; மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டுங்கள்; சமூக சேவைகளை மக்கள் ஒன்றுகூடிச் செய்யும்போது சமூக உணர்வு, ஒற்றுமை, திருப்தி என்பன காணக்கூடியதாக இருக்கும். அத்துடன் எளிதாகவும் மகிழ்ச்சியாகவும் செய்யலாம்.

இப்பணிகளை விளையாட்டாசுச் செய்யும்போது குழந்தைகளுக்குக்கூட சமூக உணர்வு ஏற்படும். சமூக சேவைகளில் முன்நிற்கும் மக்கள் மிக மிகக் குறைவாகவே உள்ளனர். வளர்ந்துவரும் சமுதாயத்திலே இன்றைய செல்வங்கள் நாளைய தலைவர்களாக நிமிரப்போகும் பின்னைய தலைமுறைகளுக்காவது உங்கள் சேவைகளை முன்நோக்குங்கள். அவர்களுக்கு எடுத்துக்காட்டாக பின்பற்றக்கூடிய வகையில் விருப்பங்களையும் தன்னுணர்வுகளையும் வளர்க்கும் வகையிலும் சிறுர்களோடு நெருங்கி எடுத்துக்காட்டாகப் பணிகளில் இறங்குங்கள்,

நீங்கள் செய்யும் பணிகள்—இன்றைய காலகட்டத்திலே மக்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் உதவி புரிந்துதான் சேவைசெய்யவேண்டும். சேவைகள் பலவகைப்படும், காலத்திற்கேற்றவாறு சேவை செய்வதே சேவையாளனுக்கேற்ற தகுதியாகும், இதற்கு எடுத்துக்காட்டாக அகதிச்சேவைகள் இடம் பெறும்.

நீங்கள் செய்யும் பணிக்கு உங்களுக்கு ஊதியம் கிடைக்கலாம், கிடைக்காமலும் விடலாம்.

அதே நேரம் உங்கள் பணிக்கு ஊதியம்கொடுக்க இயலாத ஏழை ஒருவரை கவனிக்காமல் விடவோ மறுக்கவோ, அலட்சியப்படுத்தவோ, ஒருபோதும் செய்யாதீர்கள்.

சமூகசேவையில் பாரபட்சமற்ற முறையில் இவ்வாறு சேவை செய்வதால் மக்கள் மத்தியில் உங்கள் மதிப்பு உயர்வதோடு நம்பிக்கையும், விசுவாசமும் ஏற்பட்டு மக்களின் அன்புக்குப்பாத்திரமாகின்றீர்கள்.

இந்த மதிப்பும், அன்பும் நீங்கள் பெறும் ஊதியத்தைவிட பலமடங்கு உயர்ந்தவையாக இருக்கும். எனவே சேவையாளர் அனைவரும் நீயா, நானு என்று போட்டி போடாமல் முன்வந்து சேவைசெய்ய முயலுங்கள்.

பணத்திற்காகவோ வேண்டாம்!
மக்களுக்காகவே பணியாற்றுங்கள்!
பணத்தைவிட மக்களே முதன்மையானவர்கள்!

# பயிற்சியும் கருத்தரங்கும்

அறவழி பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கான இரண்டாம் பருவகால பயிற்சி வகுப்புகள் இம்மாதம் 20, 21, 22ஆம் திகதிகளில் கைதடி நவீல்ட் பாடசாலையில் நடைதுபறவுள்ளன.

இத்திகதிகளில், ஆசிரியைகளுக்கான தலைமைத்துவ, முதலுதவி, அறவழி, மீட்டல் பயிற்சிகள் இடம்பெறவுள்ளன.

ஆசிரியைகளுக்கான பயிற்சி வகுப்பினை பனை அபிவிருத்திச் சபைத்தலைவர் திரு. கே. நடராசா வைபவரீதியாக ஆரம்பித்து வைத்து சொற்பொழிவு ஆற்றுவார்.

அத்துடன், அறவழி சிறுவர் கழக உறுப்பினர்களுக்கான ஒருநாள் பயிற்சியும் கருத்தரங்கும் இம்மாதம் 20ம் திகதியன்று நவீல்ட் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சியின்போது 27 அறவழி சிறுவர் கழக உறுபினர்கள் பங்கேற்கவுள்ளனர்.

அறவழி சிறுவர் கழக இயக்குனர் திரு. இ. பேரம்பலம் தலைமையில் நடைபெறவிருக்கும் ஆரம்பவிழாவில் சிவதர்மவள்ளலும் மில்க்வைற் தொழிலக அதிபருமான திரு. க. கனகராசா ஜே. பி. சிறுவர்களின் பயிற்சி வகுப்பினை வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

# அறப்போர்

—வித்துவான் வே. லட்சுமணன்

ஒருவன் மற்றவனை ஒரு கன்னத்தில் அடித்தான். கன்னத்தில் அடிவாங்கியவன் அடி கொடுத்தவனிடம் தனது மற்றொரு கன்னத்தையும் காட்டி அடிக்கச் சொன்னான்.

அப்படி அவன் செய்தபோது, அடித்தவனது கை சற்றே தாழ்ந்தது. அந்தக் கையைத் தாழ வைத்தது எது?

அடிபட்டவனது செய்கைதான் அல்லவா?

''ஒரு கன்னத்தில் அடித்தாயே! அது போதாது! மற்றக் கன்னத்திலும் அடித்துவிடு! அப்போதாவது உன் ஆத்திரம் அடங்கட்டும்''! என்று சொல்லாமற் சொல்லிக் கன்னத்தைக் காட்டிய அவனது செயலுக்குத்தான் எத்தனை வலிமை!

சிலர் இதை ஏற்க மறுக்கலாம்.

ஒருவன் அடிக்கும்போது பதிலுக்கு அடிப்பது அல்லவா ஆண்மை என்று கேட்கலாம்.

ஆண்மை தான், இல்லை என்று சொல்லவில்லை!

ஆண்மை எனப்படும் வீரத்தில் பல வகை உண்டு. அடியைப் பொறுப்பது என்கிற தன்மை இருக்கிறதே அது உன்னதமான ஆண்மை.

அடித்துவிடலாம். பதிலுக்கு அடியை வாங்கிக்கொள்ளவும் செய்யலாம். மீண்டும் அடி கொடுக்கலாம். மறுபடியும் அடியை வாங்கிக்கொள்ளலாம்,

இப்படியே தளர்ச்சி ஏற்படும்வரை போராடலாம். அந்தப் போராட்டத்தின் முடிவு என்ன என்பதை ஒரு கணம் யோசிக்க வேண்டும்.

போராட்டத்தில் இருவகை உண்டு. ஒன்று அறவழிப் போராட்டம். மற்றது மறவழிப் போராட்டம்.

அடித்து அடித்துச் சண்டையிடுவது மறவழிப் போராட்டம். அடித்தால் அதை வாங்கிக்கொண்டு பதிலடி கொடுக்காமல் மேலும் அடியை வாங்கிக் கொள்ள முன் வருவது அறவழிப் போராட்டம்.

முதல் வகையான மறவழிப் போராட்டத்தின் முடிவு எவ்வளவு பயங்கரமானதாகவும் அமையலாம். மரணம் வரைக்கும் அதற்கு எல்லைக்கோடு உண்டு. தூக்கு மேடை வரைக்கும் அழைத்துச் செல்லக்கூடிய தண்டனை அதற்குண்டு. இருவருக்கும் அடிதடியாக உடற்காயங்கள் ஏற்பட்டு, கை கால்கள் ஊனம் அடைந்து வாழ் நாள் பூராவும் அவதிப்படும் நிலையும் நேரலாம். மேலும் அந்த இருவருக்குள்ளும் தீராத பகைமை உணர்வு நிலைத்துவிடக் கூடுமாகையால் மீண்டும், மீண்டும் பூசலும்—ஏசலும் தொடரலாம்.

இப்படியெல்லாம் நடப்பதால் இருவருக்கும் கிடைக்கக்கூடிய லாபம் என்ன?

அறவழிப் போராட்டம் அப்படிப்பட்ட விளைவை உண்டுபண்ணுது.

அடித்தவனை யோசிக்க வைக்கும் ஆற்றலுடையது அறவழிப் போராட்டம்.

ஆத்திரப்பட்டு அடிக்கிறானே அவன்! அது மிகவும் தப்பான காரியம் என்பதை அவனுக்கு எடுத்து உணர்த்துவது அறவழிப் போராட்டம்.

தான் ஆத்திரத்தால் செய்துவிட்ட குற்றத்தை எண்ணிப் பார்த்து, அதற்காக வருந்தி, அதற்குப் பிராயசித்தமாக மன்னிப்புக் கேட்க வைத்து, அவனை மனிதனாக மாற்றும் சக்தி படைத்தது அறவழிப் போராட்டம்!

---

**தன்னை ஏமாற்றிக் கொள்வதால் மகிழ்ச்சி ஒரு பொழுதும் ஏற்படாது, உண்மை வெறுப்பைக் கொடுத்தாலும் உண்மையை உண்மை என்றெண்ணுவது நலம். உண்மையின் அடிப்படையில் உன் வாழ்வின் கட்டடத்தைக் கட்ட வேண்டும்.**

---

# தர்மகர்த்தாக் கொள்கை

காந்தியடிகள் தனியாக எந்தச் சொத்தையும் வைத்துக்கொள்ளும் உரிமையைத் தனது வாழ்க்கையில் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், தனியார் சொத்துரிமையே இல்லாத ஓர் உலகினை அவர் எண்ணிப் பார்க்கவில்லை. ஆனால் அவர் மதிப்பான வாழ்விற்குத் தேவையான அளவுக்கு மட்டுமே தனியார் சொத்துரிமையை வரையறுத்துக் கொள்ளவேண்டுமென்று கூறினார். அதற்குமேல் வைத்திருப்பதற்கு தர்ம கர்த்தாக் கொள்கையைக் கூறினார்.

அவர் முதலாளியை., மூலதனத்தை உருவாக்க வைத்திருக்க வளர்க்க எதனைச் சார்ந்திருக்கின்றாரோ அதற்கு தன்னை தர்மகர்த்தாவாக கருதவேண்டுமென வேண்டினார், இப்பொழுது செல்வத்தைப்பெற்றிருப்பவர்களை ஏழைகளுக்காக அதனை வைத்திருக்கும் தர்மகர்த்தாக்களாக மாறும்படி கூறினார். தர்மகர்த்தாக்கள் என்ற முறையில் அவர்கள் சொத்துக்களை வைத்துக்கொள்ளவும் திறமைகளைப் பயன்படுத்தவும்,செல்வத்தைப் பெருக்கவும் அனுமதிப்பது அவர்களது சொந்த நலன்கருதியல்ல, நாட்டின் நலன்கருதி அவர்களை அனுதிப்பதால் சுரண்டலுக்கு அதில் இடம் இல்லை. அவர்கள் செய்கின்ற பணிக்காகவும் அதனுடைய தாய மதிப்பிற்காகவும் அவர்கள் என்ன ஊதியம்பெறலாம் என்பதை அரசு நெறிப்படுத்தும். வாரிசினைப் பொறுத்தவரை முதல் தர்மகர்த்தா அவருக்குப் பின் தர்மகர்த்தாவாக யார் இருப்பார் என்பதைக் கூறலாம். ஆனால் இறுதிமுடிவு செய்யும் உரிமை அரசிடம் இருக்கும்.

ஒவ்வொரு பொருளும் இறைவனுக்குத்தான் சொந்தம் ஆதலால் மனிதர் அவருடைய சொத்தையோ திறமையையோ தர்மகர்த்தாவாக வைத்திருக்கவேண்டும் என்ற ஆழ்ந்த மத நம்பிக்கையின் அடிப்படையில் மட்டும் அவர் தர்மகர்த்தாக் கோட்பாட்டை உருவாக்கவில்லை, பல நடைமுறைக் கருத்துக்களின் அடிப்படையிலும் தர்ம கர்த்தாக் கொள்கையை அமைத்தார்,

பலாத்காரத்தின் மூலமாக சொத்தையோ, திறமையையோ உடைமையற்றதாக்குவதால் எப்படியும் வர்க்கப் போராட்டம். வெறுப்பு, தொழிலாளர் சர்வாதிகாரம், சக்திவாய்ந்த எதனையும் திணிக்கின்ற அரசு தோன்றுமென்பதையும், அகிம்சை சமுதாயம் அமைக்கமுடியும் என்ற நம்பிக்கை அழிந்துவிடும் என்பதையும் அறிந்திருந்தார்.

சொத்துக்களை சேர்த்து வைத்திருக்கின்றவர்களிடம் உற்பத்தியைப் பெருக்கத்தக்க சிறப்புத்திறமைகள் இருக்கிறதென்றும், தனித்திறமைகளையுடைய பலரால் சிலவற்றைப் படைத்தளிக்கமுடியுமென்றும், ஆகையால் அவர்களை பலாத்காரத்தின்மூலம் அழித்தால் உற்பத்தி குறையுமென்றும். அது தங்க முட்டைகளை இடுகின்ற வாத்தைக்கொன்றது போல் இருக்குமென்றும் உணர்ந்தார். ஆதலால் பலாத்காரத்தின்மூலம் வருவாயோ, சொத்தோ இல்லாமல் செய்வதைவிட அவர்களை தர்மகர்த்தாக்களாக செயல்படத் தூண்டுவதே சிறந்ததென்று வலியுறுத்தினார்.

அதே சமயத்தில் மனித இயல்பை அவர் நன்கு அறிந்திருந்ததால்வெறும் தூண்டுதல் மட்டுமே போதுமானதல்ல, என்பதைப் புரிந்திருந்தார், ஆகையால் அவர் தூண்டுதலுக்கு இணங்காவிட்டால், அதற்பதிலாக பலாத்காரத்தின்மூலம் சொத்துக்கள் இல்லாமல் செய்கின்ற நிலைவரும் என்று எச்சரித்தார். அதே சமயத்தில் குத்தகைக்காரரிடமும் தொழிலாளர்களிடமும் அவர்கள் தங்களுடைய பலத்தை அழியாததாலும் சுரண்டலை மறைமுகமாக ஏற்றுக்கொள்வதாலும்தான் அவர்களை சுரண்டமுடிகின்றதென்பதை எடுத்துரைத்தார்.

சமுதாயத்திலுள்ள ஏழைகளின் ஒத்துழைப்பின்றி செல்வந்தர்கள் தொடர்ந்து சுரண்டல்காரராக இல்லாமல் அவர்களுடைய போக்கினைமாற்றி அவர்களை தர்மகர்த்தாக்களாக மாற்ற சரியான, தவறற்ற வழிமுறைகளாக அகிம்சை முறையில் ஒத்துழையாமல் இருப்பதையும் சமுதாய எதிர்ப்பினையும் பரிந்துரைத்தார், சட்டத்தின் மூலமாக குறைகளைப்போக்கும் நடவடிக்கைகளை செயல்படுத்தவும் தர்மகர்த்தா முறைக்கு ஒரு சட்டமுறை வடிவம் வழங்கவும் அதனை ஒரு சட்டமுறை நிறுவனமாக்கவும் அவர் தயாராக இருந்தார்.

சொத்துடைமைத்தொடர்புகளிலும். பொதுநலத்துக்காகத் தனிமனித திறமைகளைப் பயன்படுத்துவதிலும் மாற்றங்களை கொண்டுவர அவர் செல்வர்களின் நல்ல உணர்வுகளைத் தூண்டுதல், இணங்கச் செய்தல், பலாத்காரத்தால் மாற்றுகின்ற முறை மிகவும் கவர்ச்சியற்று இருப்பதையும் எப்படியும் மாற்றம் ஏற்பட்டே தீரும் என்பதையும் கற்பித்தல், சுரண்டல்காரர்கள் செயல்படுதல் சாத்தியமற்றுப் போகும் வண்ணம் சுரண்டப்படுகின்றவர்கள் அகிம்சை முறையில் ஒத்துழையாமல் இருத்தல் ஆகிய தொடர் நடவடிக்கைகளை எண்ணிப்பார்த்தார்.

காந்தியடிகள் அவருடைய சர்வோதய, தர்மகர்த்தா சமதர்மத்தில் தன்னைத்தானே வளர்த்துக்கொண்டு நிலைத்து நிற்கின்ற ஆற்றல் இருக்கின்ற

(5ம் பக்கம் பார்க்க)

# வாழ்க்கை என்பது ... ...

✻ வாழ்க்கை என்பது ரோஜா பரப்பிய மஞ்சமல்ல. முட்கள் பரப்பிய படுக்கை.
—ஆபிரகாம் லிங்கன்

✻ வாழ்க்கை சிலருக்கு புயலில்படகாகிறது. சிலருக்குத் தென்றல் மணக்கும் பூக்காடாகிறது.
—காண்டேகர்

✻ நம் எண்ணங்களால் உருவாக்கப்பட்டதே நம் வாழ்க்கை.
—மார்கஸ் ஆரிலியஸ்.

✻ உலக ஜீவராசிகளில் மனிதனைத்தவிர மற்றவைகள் யாவும் உள்ளத்தில் இன்பம் காணவும், 'வாழ்வு இன்பத்தை அனுபவிக்கவே' என்ற குறிக்கோள் உடையனவாகவும் இருக்கின்றன.
—சாமுவேல் பட்லர்.

✻ வாழ்க்கை இருப்பதை அனுபவிப்பது.
—உமர்கயாம்.

✻ வாழ்வில் துன்பமில்லை வராவிட்டால் உண்மையான வாழ்க்கையை உணரமுடிவதில்லை.
—வங்காள நாவல்

✻ வாழ்க்கை என்பது மலர்க்காடல்ல. சரளைக்கற்கள் படியவைத்த பாதை! நச்சரவம் உலவும் மலர்க்காடு.
அறிஞர் அண்ணா.

✻ வாழ்க்கையை சமபக்க முக்கோணத்திற்கு ஒப்பிடலாம். மூன்றும் ஒரளவு உடையதாக இருந்தால்தான் முழுஉருவுடன் கூடிய அமைப்பைக் காணமுடியும். நல்லறிவு, நற்தொண்டு, நல்லிறை வழிபாடு என்ற மூன்று பக்கங்களை உள்ளடக்கி இருப்பதே வாழ்க்கை.
—மாட்டின் லூதர் கிங்

✻ வாழ்கை என்பது குறுகியதுதான். ஆனல் சிறப்பாக வாழநினை! வாழு!
—குருசேவ்

✻ வெற்றியுமில்லை தோல்வியுமில்லை என்பது வாழ்க்கையில்லை. இரண்டில் ஒன்று என்று வாழ்ந்தால் வாழ்க்கையில் தோற்பதில்லை.
—மில்டன்.

✻ நாம் வாழ்வைக் காலம் கடந்து எண்ணிப் பார்க்கின்ருேம்! வாழ்நாட்களில் வளர்ந்துகொண்டிருக்கும் நம் உடல் வளர்ச்சியின் ஒவ்வொரு கூறும், நடந்துகொண்டிருக்கும் ஒவ்வொரு பணியும் பொறுப்புடையதாக அமைவதே வாழ்க்கை.
—ஸ்டீபன் லிகாக்

தொகுப்பு: கேஜே

## தர்மகர்த்தா....

(4ம் பக்கத் தொடர்ச்சி)

தென்றும் வலியுறுத்தினர். சமதர்மத்திலோ மார்க்சியப் பொதுவுடைமையிலோ இத்தகைய ஆற்றல் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டினர். இப்படிக் கூறியதற்கு காரணம் காந்தியடிகள் பலாத்காரத்தின் மூலம் அடைவது எதுவும் நிலையானதாக இருக்காதென்றும், பொதுவுடமை பலாத்கார வழிமுறையையே பின்பற்றுகின்றதென்றும் நம்பியது மட்டும் காரணமல்ல பலாத்காரம்மூலம் அடைகின்ற சமதர்ம உடைமையை அழிக்கின்றதே தவிர உடைமை உணர்வை அழிப்பதில்லை என்பதும் முக்கிய காரணமாகும்.

இப்பொழுதிருக்கின்ற செல்வ ஏற்றத்தாழ்வுகளை நீக்கியபோதிலும், தனிமனிதர்களின் ஆற்றல், திறமை ஆகியவற்றிலுள்ள வேறுபாடுகளின் காரணமாக மறுபடியும் ஏற்றத்தாழ்வுகள் தோன்றக்கூடிய சிக்கல் இருக்கின்றது. தனித்திறமைகளை வளர்த்து சமுதாய நலன் கருதிப் பயன்படுத்தும் தர்மகர்த்தா முறையில் வைத்திருக்காதவரை அவை எந்தப் பெயரில் அல்லது உருவத்தில் இருக்குமென்பது முக்கியமல்ல தனி வாய்ப்புக்களைப் பெற்ற ஒரு வகுப்பு தோன்றவே செய்யும்.

காந்தியடிகள் வாக்கு தீர்க்கதரிசனமாக அமைந்தது. ஏனென்ருல் சோவியத் முறையில் வளர்த்திருக்கின்ற ஏற்றத்தாழ்வுகளிலிருந்து இன்று உலகம் நன்ருக இதனை அறிந்துள்ளது. மாசேதுங்கு சீனவில் இதேபோலத் தோன்றுகின்ற போக்கினை அழிக்கத் தீவிரமாக முயன்றபோதிலும் அங்கேயும் பெருமளவில் வருவாயில் ஏற்றத்தாழ்வுகள் ஒரு காலகட்டத்திற்குப் பிறகு மறுபடியும் தோன்றிவிடுமென்பது தெளிவாகத் தெரிகின்றது. நடைமுறையில் செயல்படுத்த முடியுமென்ற நம்பிக்கையில் காந்தியடிகளின் தர்மகர்த்தா முறைக்கொள்கைதான் மறுபடியும் மறுபடியும் ஏற்றத்தாழ்வுகள் தோன்றுகின்ற சிக்கலுக்கு ஒரே சாத்தியமான தீர்வு முறை என்று கூறலாம்.

# சமயமும் அரசியலும்

(முன்னைய தொடர்ச்சி)

திலகருக்குப் பதில் சொல்லும் வாயிலாக காந்தியடிகள் முதலில் சொல்லிய அரசியல் வாதிகளைத் திருத்துகிறார்.

அரசியலில் எதுவும் நியாயம் என்று அவர் கருதுகிறார். அரசியல் வாழ்க்கையில் அத்தகைய சித்தாந்தத்தை நான் ஆட்சேபிக்கிறேன் மேல்நாட்டினரின் தந்திரங்களையும் முறைகளையும் நாம் பின்பற்றினால் இந்த நாட்டின் அரசியல் வாழ்கை முற்றிலும் ஊழல் மயமாகிவிடும் என்பது எனது கருத்தாகும். நேர்மை, நியாயம், தருமம் முதலியவற்றை மிகவும் கண்டிப்பாக அனுசரித்தால்தான் இந்த நாட்டின் உண்மையான நலன்கள் அபிவிருத்தியடையமுடியும் என்பதே எனது நம்பிக்கை,

ஏற்கனவே சொன்னபடி சமயத்தை அரசியலிலும் கொண்டாடவேண்டுமென்றால் சமயத்திற்குத் தெளிவான வரம்புகள் கட்டிப்பேச வேண்டியிருப்பது போல அரசியலுக்கும் தெளிவான இலக்கணம் கொண்டுவரவேண்டும். நான் ஏற்கனவே கூறியதுபோல அடிகள் அரசியல் தொண்டு அரசியல், முதலாவதாக கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையேதான் எனது அரசியலாகும். எனவே அதிலிருந்து என்னை விடுத்துக்கொள்ள நான் முயலமாட்டேன். அவ்விதம் விடுதலை பெற முயற்சி செய்வது என் ஆயுள்கால லட்சியத்தையும் கடவுளையும் மறுப்பதாகும் என்பது அவர் அரசியல் விளக்கம்,

அடிகள் அரசியலை வாழ்வின் ஒரு கட்டமாக கொண்டிருந்தார். அவர் வாழ்க்கையின் முடிவான இலக்காக சமயம் காட்டும் கொள்கையை கொண்டிருந்தபடியால் அரசியலை அவர் தன் வாழ்க்கைப் பாதையின் முதல் பகுதியாக நினைத்தார்.

எனினும் அந்தத் தேதிக்குப்பிறகு 1947 ஆகஸ்ட் 15 எனது அரசியல் அலுவல்கள் வேறு பாதையில் செல்வது சாத்தியமே. அது சந்தர்ப்பங்களால் நிச்சயிக்கப்படும்.

இதைத்தான் அவர் தெளிவாக எனது அரசியல் உள் வளர்ச்சியையே முக்கியமாகக்கொண்டிருக்கிறது என்றார். அது சர்வ வியாபகமான இயல்புடையது. எனவேதான் அது வெளிவளர்ச்சிக்குக் காரணமாகயிருக்கிறது என்றார்.

இதைப் புரிந்துகொள்ள அவர் அடிப்படையில் சமயவாதி என்றே சொல்லலாம்-அவர் சமயவளர்ச்சி எந்தத்துறையும் ஒதுக்காது சமயத்தின் காரணமாக அவருக்கு சமூகசேவை தேவையாயிற்று அதற்கு அரசியல் இடம் தந்தது. எனவே அரசியல் வாதியானார். இதைப் புரிந்துகொள்ள நாம் இம்மாதிரி சொல்லலாம் அடிகள் ஆசிரியராகவோ அல்லது வேறு ஒரு தொழிலாளராகவோ மட்டும் இருந்தால்கூட அவர் தன் சமய உள்வளர்ச்சியையே குறிக்கோளாகக் கொண்டு அந்தத் தொழிலை சாதனமாக்கிக்கொண்டிருப்பார்.

காந்திஜியின் அரசியல் கருத்துக்களைப்பற்றி கவனிக்கும்போது மூன்று விடயங்கள் நினைவிருக்க வேண்டும். அரசியல்வாதி சமயப்பற்று உடையவனாக இருக்கவேண்டும் அந்தச் சமயத்திற்கு மிகவும் அடிப்படையான பொருள் இருக்கவேண்டும். ஒழுக்கம் நேர்மையுடன் கடவுள் பற்று மட்டும் உள்ள அளவுக்குத்தான் அந்தச் சமயம் பொதுத்தன்மையுடன் இருக்கும்.

அரசாங்கம் வேறு அரசியல்வேறு. அரசாங்கத்திற்கு ''சரித்திர'' மதப்பற்று இருத்தல்கூடாது, அப்போதுதான் அதில் ஒவ்வொரு தனி நபரும் அரசாங்கத்தின் தலையீடு இன்றி தமது மனத்திற்குச் சிறந்தது என்று தோன்றும். ஒரு சமயத்தைப் பின்பற்ற உரிமையிருக்கும். சமயத்தைக்கொண்டு அவர்களிடையே சச்சரவு இருக்க நியாயமில்லை. எனவே அரசாங்கத்தில் ஈடுபட்டிருப்பவன் சமயம் அவன் தனிப் பொறுப்பாகிவிடும். இதை இன்னும் தீவிரமாக அவர் சொல்லுகிறார்: நான் சர்வாதிகாரியாக இருந்தால் சமயமும் அரசாங்கமும் வெவ்வேறாகவே இருக்கும்.

சமயப்பற்றும் தேசபக்தியும் தனித்தனியானவையாக இருக்கமுடியும். ஆனால் ஒன்றுக்காக ஒன்றை விட்டு விடமுடியாது. தேசபக்தி அரசியல் அல்ல. இங்கே சமயம் என்பது இந்து, முஸ்லிம், வைணவம் என்பது போன்றதும் சரித்திரத்தில் பேசப்படுவதுமான சமயமாகும். தொகுப்பாக காந்தியடிகள் கருத்தில் அரசியல் வேறு சமயம்வேறு என்று நடந்துகொள்ள வேண்டியதில்லை அரசியலை சமயமாக்குவதுதான் நல்லது. ஆனால் அதை இந்துசமயம் அல்லது முஸ்லிம் சமயமாக்குவது என்று பொருள் அல்ல. கடவுள் நம்பிக்கைகொண்டு ஒழுக்கம், தர்மம். நேர்மை, உண்மை இவற்றின் வழி அரசியலை நடத்தவேண்டும். அரசியல் தொண்டாக இருந்தால் அதுவும் எல்லா மக்களுக்கும் உரிய தொண்டாயிருந்தால் அப்படித்தான் இருக்கமுடியும்.

அதிலிருந்து பிறந்த அடுத்த கருத்து அரசாங்கம் நடாத்துபவர்களும் அரசாங்கத்தை ஒரு குறிப்பிட்ட சமயத்தின் அல்லது ஒரு சமயத்தின் குறிப்பிட்ட கடவுள் கொள்கையுடன் இணைக்கக்கூடாது. ஆனால் சமய நம்பிக்கைகள் அடிப்படை ஒழுக்கத்தை வளர்க்கவேண்டும். அதிலிருந்து வளர்ந்த மூன்றாவது கருத்து சமயம் தேசபக்திக்கு இடையூறாக ஆகக் கூடாது. அதற்காக சமயத்தை விட்டு விடவும் கூடாது.

# அறவழிப் படை

அமைதியான காலத்தில் போலவே குழப்ப சமயத்திலும் அறவழிப்படை ஆயுதமேந்திய படைபோலன்றி வேறுவிதமாய் நடந்துகொள்ளும். அதைச் சேர்ந்தவர்கள் கலகங்களே தோன்றுதிருக்க உதவும் நிர்மாணவேலைகளில் சதா ஈடுபட்டிருப்பார்கள். சண்டையிட்டுக் கொள்ளும் சாதிகளும், சமூகங்களும் கலந்து பழகுவதற்குச் சந்தர்ப்பங்களை உண்டாக்குதலும் சமாதானப் பிரசாரம் செய்தலும் தம்வட்டாரத்திலுள்ள ஆடவர், பெண்டிர், வயதுவந்தவர் குழந்தைகள் ஆகிய எல்லோருடனும் தொடர்புகொள்ள உதவும் காரியம் எதிலேனும் ஈடுபடுதலும் அவர்கள் கடமையாகும். இத்தகைய படை எந்த நெருக்கடியையும் சமாளிக்கச் சித்தமாய் இருக்கவேண்டும். ஜனத்திரளின் ஆக்ரோஷத்தை அவிப்பதற்கு போதுமான தொகையில் அவர்கள் தம் உயிரையும் அளிக்கவேண்டும். ஒரு பாவமும் அறியாத சில நூறுபேரோ ஆயிரம்பேரோ இவ்வாறு வேண்டுமென்றே பலியானால் அது பிறகு கலகங்களே தோன்றாமற் செய்துவிடும். போலீசும் ராணுவமும் வந்து பலப்பிரயோகம் செய்வதைவிட இவ்வாறு சில நூறு வாலிப ஆடவரும் பெண்களும் மக்களின் பேய்த்தனத்திற்குப் பலியாதல் அதிக தைரியத்தைக் காட்டுவதாகும், குறைந்த நஷ்டமுண்டாக்குவதாகவும் இருக்கும்.

இந்த இலட்சிய ஆட்சி நடக்கும் நாட்டில் (இது இலட்சிய நிலை என்பதில் ஐயமில்லை) வெளியார் ஆக்கிரமிப்பை நிச்சயமாய்த் தடுக்கமுடியும் என்று என்றுஎப்படிக்கொள்வது, யந்திரயுகத்தின் படைப்பான நவீன ஆயுதங்கள் கொண்ட படை இல்லையேல்இவையுள்ள எதிரிப்படை நாட்டை துவம்சம் செய்து, மக்களை தம் வயமாக்கிவிடாதா,

கேள்வி கேட்பவர் என் கட்டுரையைப் பலமுறை கவனமாய்ப் படித்ததாகவும் அது தமக்கு மிகவும் பிடித்ததாகவும் சொல்லுகின்றார். தாம் சேனையில் சேவைசெய்திருப்பதாக வேறுகூறுகிறார். ஆனால் அவர்என் கட்டுரையில் முக்கியமான அமிசத்தைக் கவனிக்கத் தவறிவிட்டார் என்பது தெளிவு. அதாவது ஒரு நாடு அல்லது மக்களினம் எவ்வளவு சிறிதாயினும் அதற்கு மனமும் விருப்பமும், உறுதியும் மட்டுமிருந்தால் தனிமனிதனைப் போலவே அதனால் தன் மானத்தையும் மரியாதையையும் உலகமே ஆயுதங்கள்கொண்டு தாக்கினாலும் சமாளித்துக் காத்துக்கொள்ள முடியுமென்பது. நிராயுதபாணிகளின் ஒப்பற்ற பலமும் சிறப்பும் அமைந்திருப்பது இதில்தான். இதுவே எந்நிலையிலும் தோல்வியை அறியாத ஏற்காத அறவழி எதிர்ப்பு என்பது. ஆகையால் அறவழியைக் கொள்கையாய்க் கொண்டுள்ள நாட்டையோ, சமூகத்தையோ அணுக்குண்டைக்கொண்டும் அடக்கி அடிமைப்படுத்த முடியாது.

ஆயுத பலத்தையே முக்கியமாய் நம்பியிருக்கும் நவீன நாடு ஒன்று உள்நாட்டுக் கலகத்தும் வெளித் தாக்குதல்களையும் அறவழி முறையில் எதிர்த்துச் சமாளிக்க முடியுமா?

ஆயுத பலத்தையே நம்பி இருந்துவரும் நவீன நாட்டினால் உள்நாட்டுக் கலகத்தையும் வெளித் தாக்குதல்களையும் அறவழி முறையில் சமாளித்து எதிர்க்கமுடியாது. ஒரு மனிதனால் கடவுளையும் சைத்தானையும் ஏக காலத்தில் வழிபட இயலாது. ஒரேசமயத்தில் ஒருவன் ஆத்திரமும் அமைதியும் கொள்ளுதல் சாத்தியமல்ல.

தன் எதிரி அறவழிப் பக்தன் என்பது தெரிந்தால் அது ரெளடிக்கும் ஊக்கம் அளிப்பதாயிராதா. கோழையொருவன் தன்னை எதிர்க்காதிருந்தால் அது ரெளடிக்கும் கொண்டாட்டம்தான். ஆயுதங்கள் தாங்கும் மாவீரனை சிப்பாயையும் பெரிய படையையும் விட வீரனின் அறவழிக்கு நிச்சயமாய் அதிக பலமுண்டு.

ஆயுதபலமுள்ளவர்கள் அறவழி முறையில் எதிர்த்தல் ஆயுதபலமில்லாதவர்கள் அவ்வாறு எதிர்ப்பதைவிடச் சிறந்ததல்லவா,

இந்தக் கேள்வியே முன்னுக்குப்பின் முரணானது. ஆயுதபலமுள்ளவர்கள் அறவழி முறையில் எதிர்த்தல் என்பதற்கே இடமில்லை. இதற்கு ரஷ்யா அறவழியைக் கையாளுவதென்றால் அது தன் ஆயுதபலம் முழுவதையும் முதலில் களைந்தெறிய வேண்டியிருக்கும்.

ஆனால் ஒரு காலத்தில் மிக்க படைப்பலம் உள்ளவர்களாய் இருந்தவர்கள் மனம்மாறி அறவழி முறையை அனுசரிப்பதென்றுவந்தால், அவர்களால் உலகிற்கும், எனவே தம் எதிரிகளுக்கும் அறவழியின் ஆற்றலை நன்றாகக் காட்டமுடியும் என்பதே இதிலிருந்து தெரிந்துகொள்ள வேண்டிய உண்மை.

★ வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வீடுகளை இழந்தவர்களுக்கு வழங்குவதற்காக தோலிப் என்னும் நிறுவனம் 20 லட்சம் ரூபா பெறுமதியான கூரைத்தகடுகளை வழங்கியுள்ளது.

★ பலாலி, வடமராட்சிப் பகுதிகளில் இருந்து 36 இந்திய விமானங்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தினரை கொழும்புக்கு ஏற்றிச் சென்றன.

★ தென் இலங்கையில் உள்ள தேயிலைத்தோட்டங்களில் இடம் பெற்ற வன்செயலால் பெரும்பாலான தமிழர்கள் உயிர் இழந்தாக தெரிய வந்துள்ளது.

★ இந்திய, இலங்கை ஒப்பந்தத்திற்கு ஆதரவான அரசு எம்பிக்கள், அமைச்சர்களின் இல்லங்கள் தாக்கப்பட்டுள்ளன, நிதியமைச்சர், ஜனாதிபதியின் வீடும் சேதமடைந்தன.

★ வர்லாற்று சிறப்புமிக்க சுதுமலை அம்மன் கோவில் முன்றலில் தமிழ் ஈழ விடுதலைப்புலிகளின் மாபெரும் பேரணி இம்மாதம் 4ம் திகதி நடைபெற்றது. இப்பேரணியில் இரண்டு லட்சம் மக்கள் பங்கேற்றனர்,

★ தமிழ் மக்கள்மீது இனிமேலும் ஒரு இன அழிப்பும் நடைபெறுது எனவும், வடக்கு. கிழக்குப் பகுதிகளில் தமிழ்மக்களுக்கு பூரண பாதுகாப்பு இருக்கும் எனவும் இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தி அளித்த உறுதிமொழியை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஏற்றுக்கொண்டார்,

# செய்திச்சரம்

★ இந்திய இராணுவத்தினர் யாழ் மத்திய பஸ் நிலைய அலுவலகக் கட்டடத்தின் மேல் மாடியில் தற்காலிகமாக முகாம் ஒன்றை அமைத்துள்ளனர்

★ தமிழ் ஈழ விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் இந்திய, இலங்கை இராணுவ அதிகாரிகளிடம் 5—8—87ல் பலாலியில் வைத்து தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் அரசியல் தலைவர் திரு. வி. யோகி அவர்களால் ஒப்படைக்கப்பட்டன.

★ ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் தாக்குதல் நடவடிக்கைகள் காரணமாக யாழ்நகரில் சேதமடைந்த கடைகளையும், பாடசாலைகளையும் வீடுகளையும் இந்திய இராணுவ உயர் அதிகாரிகள் பார்வையிட்டனர்.

★ கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையிலான புகையிரதச் சேவை தற்போது பளை வரையும் ஆரம்பித்துள்ளது. மிகவிரைவில் யாழ்ப்பாணம் வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது,

★ வடமராட்சிப் பகுதியிலிருந்து வெளியேறிய குடாநாட்டின் சில பகுதிகளில் அகதிகளாக இருந்த மக்கள் திரும்பவும் தத்தமது இருப்பிடங்களுக்கு திரும்பிவிட்டனர்.

★ இந்திய நிவாரண உதவிப்பொருட்கள் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இந்திய இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரால் வழங்கப்பட்டுவருகின்றன.

★ ஆறுவது தமிழாராய்ச்சி மாநாடு இவ்வருடம் நவம்பர் மாதம் கோலாலம்பூரில் நடைபெறவுள்ளது.

★ மக்களின் நலன் கருதியே ஆயுதங்களை தமிழ்ஈழ விடுதலைப்புலிகள் தமது ஆயுதங்களை கையளித்தோம் என அரசியல் குழுத்தலைவர் திரு. வி. யோகி கூறியுள்ளார்.

★ நாட்டின் தென்பகுதியில் இடம்பெற்ற வன்செயல்கள் காரணமாக வடபுலத்திற்கான வெளியூர் தபால் விநியோகம் சுமார் 12 தினங்களாக நடைபெறவில்லை.

★ இலங்கை இந்திய சமாதான உடன்படிக்கையை அடுத்து தமிழ் மாநிலத்தில் அமைதியை நிலை நாட்டவென சுமார் 4000 இந்திய இராணுவப் படையினர் தமிழ் மாநிலம் வந்துள்ளனர்.

★ வடபுலத்தில் போக்குவரத்துச் சேவைகள் தினசரி இரவு 7 மணிவரை நடைபெற்றுவருகின்றன.

★ யாழ் கோட்டை, பலாலி, காங்கேசன்துறை, நாவற்குழி, ஜனகரி, வடமராட்சி ஆகிய இடங்களில் உள்ள இராணுவ முகாம்களை இந்திய இராணுவம் பொறுப்பேற்றுள்ளது,

★ தங்காலைச் சிறையில் வைக்கப்பட்டிருக்கும் 90 தமிழ் கைதிகள் தொடர்ச்சியான உண்ணு விரதம போராட்டத்தை நடாத்திவருகின்றனர்.

★ மேற்கு ஜெர்மனியில் தஞ்சம் புகுந்திருக்கும் தமிழ் இளைஞர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவது தொடர்பாக ஆராயவென மேற்கு ஜெர்மனி எம். பி. ஒருவர் வடபுலம் வந்து சென்றுர்.

★ பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டிருக்கும் 5400 தமிழ் இளைஞர்கள் பொதுமன்னிப்பளித்து விடுதலை செய்யப்படவுள்ளதாக அறியப்படுகின்றது.

(வெளிநாட்டு வாசகர்களின் நன்மை கருதி வெளியிடப்படுகின்றது,

# சமுதாயமே உன் நிலை என்ன?

இன்று இந்நிலையைக் கேட்பார் யாருமே இல்லை, ஆம் இன்று சமுதாயத்தில் ஏற்படும் பிரச்சனைகள் எத்தனை? எமது மத்தியில் ஏற்படும் பிரச்சனைகள் என்ன? ஒற்றுமையின்மை. ஒற்றுமை—ஒற்றுமை என்றால் என்ன என்று கேட்டால் சிலர் 'சமாதானம், சகோதரத்துவம் மனுசத்தன்மை எனக் கூறுகின்றனர்கள். ஒற்றுமை என்ற சொல்லுக்குரிய பொருளை சற்று எடுத்து நோக்குவோமானால் எமது மத்தியில் வாழும் காகம், எறும்புகளின் வாழ்க்கையைப்போல தான் என்று கூறலாம். ஒற்றுமை என்ற சொல்லுக்கு சமூகத்தில் இடமே கிடையாது. நாம் நாவினால் ஒற்றுமையுண்டு ஒற்றுமை கொள்வோம் என்று பல தடவை கூறினாலும் அது செயலில் நடைபெறுவதில்லை.

ஒரு நபர் சமூகத்தினால் துக்கப்படும்போது மயக்கமா, கலக்கமா, மனதிலே குழப்பமா வாழ்விலே நடுக்கமா என்று கேட்கக்கூடிய சந்தர்ப்பங்களை அளிக்கின்றது. இன்றும் சிலர் குற்றத்தைச் செய்துவிட்டு உன்னைச்சொல்லிக் குற்றமில்லை என்று கூறுகிறார்கள். எமது சமுதாயத்தில் குற்றம் என்று தெரிந்தும் சிலர் அதைச் செய்கிறார்கள். காரணம் சந்தர்ப்பமும் சூழ்நிலைகளுமேயாகும்.

அன்று ஏழை, பணக்காரர் என்ற ஏற்றத்தாழ்வு இருக்கவில்லை. இன்று ஏழை பணக்காரன் என்று சமுதாயம் தன் தன் தரத்தையே குறைத்துக்கொள்கின்றது.

சமுதாயத்தில் ஏற்படும் பிரச்சனைகள் எத்தனையோ. சாதிப்பிரச்சனை. குடும்பப்பிரச்சனை, நிலப்பிரச்சனை, சீதனப் பிரச்சனைபோன்ற பிரச்சனைகள் இன்றும் எமது சமுதாயத்திலே நிலவி வருகின்றன.

அக்காலத்தில் குருவை அடுத்து பெற்றோரைத் தெய்வமாக வைத்து கனம் பண்ணினர். இன்று குருவை மதிப்பதில்லை. குரு யார்? எமது முன்னேற்றத்திற்கு மூலகாரணமாக அமைபவர்.

சீதனப்பிரச்சனை இன்னும் எமது குடும்பங்களிலே இருக்கின்றது. இது குடும்பங்கள் ஒன்றுரும் போது குறுக்கே நிற்கும் பிரச்சனையாகும்.

எனவே சமுதாயமே உன்னையே நீ சோதித்துப் பார். உன் விழிகளை திறந்து பார் உன் சொந்த சமுதாயத்தித்திற்கு நீ செய்த தொண்டு இதுதானா? உன் சமுதாயம் இப்படி கண்ணீர் சிந்துவது உனக்கு வெட்கமாக இல்லை? இப்படி கஷ்டப்படுவதைக்கண்டு மகிழப்போகிறாயா?

எனவே சமுதாயமே நீ விழி! துன்பத்தை ஒழி! வாழ்வைப்பெற அது உன் உன் எழுச்சிக்கு அவசியம்.

# அறவழி வெளிநாட்டு

## வாசக அன்பர்களுக்கு வேண்டுகோள்!

1979ம் ஆண்டு முதல் எமது ஸ்தாபனம் தமிழ் மக்கள் மத்தியிலே காத்திரமான ஆரோக்கியமான பணிகளை அறவழிநின்று திருப்திகரமாகவும், திறம்படவும் ஆற்றிவருவதைத் தாங்கள் நன்கு அறிவீர்கள்.

தமிழ் மக்கள் மத்தியில் சமுதாய மாற்றத்தினை அடிப்படையாகக்கொண்டு செயல்பட்டுவருகின்ற எமது ஸ்தாபனத்தின் செயற்பாட்டுப்பணி அபிவிருத்திக்கு வெளிநாடுகளில் வதிகின்ற தமிழ் அன்பர்களின் ஆக்கபூர்வமான ஆதரவும் நிதி உதவியும் கிடைப்பின் நாம் மேலும் நல்ல பல பணிகளை விசுவாசமக, சமுதாய நன்மை கருதி ஆற்றமுடியும் என்ற பெரும் நம்பிக்கை எமக்குண்டு.

எமது ஸ்தாபனம் அடுத்துவரும் காலங்களில், நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்ற பின்வரும் சில திட்டங்களுக்குத் தங்களின் மேலான நிதி உதவிகளை அன்புடன் எதிர்பார்த்துக் கோருகின்றோம்.

1. பாலர் பாடசாலைத்திட்டம்.
2. விதவைகள் நல்வாழ்வுத்திட்டம்
3. ஏழைச்சிறார் கல்வித்திட்டம்.
4. கணவர்களால் கைவிடப்பட்ட குடும்பங்களுக்கான நல்வாழ்வுத்திட்டம்.
5. அகதிகள் புனர்வாழ்வுப்பணி.

மேலே தெரிவிக்கப்பட்ட இத்திட்டங்களுக்கு, செயலுருவம் கொடுத்து, நடைமுறைப்படுத்துவதற்கு எமக்கு இன்றியமையாமல் தேவைப்படுவது நிதி ஒன்றேதான் என்பதைத் தாங்கள் நன்கு உணர்ந்து எம் சமுதாய முன்னேற்றப் பணிக்குத் தம்மால் இயன்றவரை எமக்கு உதவுவீர்களாயின் நாம் பெரு மகிழ்ச்சியடைவோம்.

எனவே, இவ் வேண்டுகோள்பற்றி, தாங்கள் கூடிய கவனம் எடுப்பதுடன் தங்கள் பகுதியில் இருக்கும் தமிழ் அன்பர்களிடமும் இவைபற்றி உரையாடி அவர்களையும் எம்பணிக்கு உதவிக்கரம் நீட்ட ஆவன செய்யும் வண்ணம் அன்புரிமையுடன் கோருகின்றோம்.

இவைபற்றிய மேலதிக விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.

''சிறுதுளி பெருவெள்ளம்''
அறவழியின் ஆக்கப்பணிக்கு—இன்றே,
உதவிடுவீர்.

செயலாளர்,
அறவழி போராட்டக்குழு
த. பெ. இல. 2.
சாவகச்சேரி.
இலங்கை.

அறவழி
NONVIOLENCE

அறநோக்கில்

# புதியதோர் உலகம் செய்வோம்!

1983ம் ஆண்டு ஆடிக்கலவரத்தை அடுத்து உச்சக்கட்ட நிலைக்கு உருவாகி பல்வேறு வகைகளில் தமிழ் மக்களுக்கு அழிவுகளையும், கோர அனர்த்தங்களையும் உருவாக்கிய இனப்பிரச்சனைக்கு, இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் பெருமுயற்சியினால் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டது.

தமிழ் மக்கள் இந்த நான்கு ஆண்டுகளில் அனுபவித்த துன்பம், துயரம், இழப்புக்கள் கால வெள்ளத்தால் அழிக்கமுடியாதவைகளே!

கடந்த கால வரலாறுகள் சோகமயமானவை! பயங்கரமானவையும்கூட!

மக்களின் சொத்துக்கள், உடமைகள் அக்கினிதேவனின் அகோர பசிக்கு இரையாகின!

பல்லாயிரக்கணக்கான மனித உயிர்கள் மண்ணோடு மண்ணாகிவிட்டன!

தமிழ் மக்களுக்கு சகல துறைகளிலும் ஏற்பட்ட இழப்புக்களை இலகுவில் கணிப்பிட்டுவிடமுடியாத அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

எதிர்காலம் இல்லையென்று விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்ட தமிழ் மக்கள் மத்தியில் இப்போது நிம்மதி நிலவ ஆரம்பித்துள்ளது.

தானங்களில் எல்லாம் சிறந்த தானமாகக் கருதப்படுகின்ற சமாதானம் தமிழ் மண்ணில் தோன்றியதை அடுத்து, தமிழ் மக்கள் மத்தியில் உற்சாகம், ஆரவாரம், பூரிப்பு, நம்பிக்கை, நிம்மதி தோன்றியுள்ளது.

அநீதி ஒழிந்து நீதி வென்றுள்ளது!!

அதர்மம் தோற்றுவிட்டது!!

தர்மம் நிலைகொண்டுள்ளது!

தமிழ்சமுதாயம் — தமிழ்மண் — வளர்ச்சி பெறவேண்டும்! அபிவிருத்தி அடையவேண்டும்! அழிவில் இருந்து மீண்டுள்ள் இனம் ஆக்கம் பெறவேண்டும்!

'தமிழ் இனம்' எனும் பாரிய கட்டத்தை வலுவுள்ளதாகவும். உறுதிமிக்கதாகவும் கட்டியெழுப்பும் பாரிய பணி ஒவ்வொரு தமிழ் பிரஜைக்கும் உண்டு என்பதை நம் இதயங்களில் ஏற்படுத்திச் செயற்பட வேண்டிய காலகட்டம் உருவாகியுள்ளது.

நொந்து, கெட்டு—தொய்ந்துபோயிருக்கும் தமிழ் இனம் எழுச்சிப் பாதையில் வீறு நடைபோட்டு புதியதோர் உலகத்தினைக்கட்டியெழுப்பி சுபீட்சமும், வளமுமிக்க சமுதாயத்தினை உருவாக்கவேண்டும் என்பதே அறவழியின் ஆதங்கமாகும்.

## அறவழி சிறுவர் நூலகம்

நுணுவில் மேற்கு அறவழி சிறுவர் கழகத்தின் முயற்சியினால் அறவழி சிறுவர் நூலகம் ஒன்று இம்மாதம் 5ம்திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அறவழி சிறுவர் கழகத்தின் தலைவர் செல்வன் துரைராஜா கலானந்தன் தலைமையில் நடைபெற்ற நூலகத் திறப்புவிழா நிகழ்ச்சியின்போது, குழுவின் செயலாளரும், அறவழி பத்திரிகை ஆசிரியருமான திரு. க. ஜீவகதாஸ், நூலகத்தினை சம்பிரதாய பூர்வமாக, நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

குழு சார்பில் நூறு புத்தகங்கள் சிறுவர் நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இப்பத்திரிகை அறவழிப் போராட்டக் குழுவினால், யாழ். புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1987 ஆவணி 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.